[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்] [1983 மார்ச் 4

(ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். 1976 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுமார் 7, 8 ஆண்டுக் காலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாமல் ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் செயலாற்றி வருவது தமிழகத்தில் ஜனநாயக வளர்ச்சிக்கு மிகப் பெரிய அபகேடு என்று சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் வறட்சியை சந்திக்கிறபோது இப்படிப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாததால் எவ்வளவு சிரமங்களை நாம் தாங்கவேண்டியிருக்கிறது என்பதை நாம் பார்க்க முடிகிறது. நான் ஆள்கிற அரசை கேட்க விரும்புவதெல்லாம் தேர்தலில் அரசியல் வெட்ப, தட்ப நிலையை பார்க்கிறீர்களா? இந்த ஏழு ஆண்டுக்காலத்தில் ஆளும் கட்சிக்கு இருக்கக்கூடிய..

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்கின்றபோது அதை நான் ஆதரிக்கிறேன் அல்லது நிராகரிக்கிறேன் என்றுதான் சொல்லலாம். சட்ட முன்வடிவிலே இருக்கிற ஷரத்துக்கள் பூராவும், அல்லது அதிலே இருக்கின்ற சாதக, பாதகங்கள் பூராவும் பேசுவதற்கு அறிமுக நிலையில் வழிவகை இல்லை என்று கருதுகிறேன். துணைத் தலைவர் அவர்கள் தான் இதற்கு முடிவு கூறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜெனரல் டிஸ்கஷனில் அதை பேசிக்கொள்ளலாம். இந்த நிலையில் மெரிட்ஸ் ஆப் தி பில்லை பற்றி பேச முடியாது. ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளுங்கள். விரிவாகப் பேசினால் இந்த ஏழு பில்களுக்கே இன்றைக்கு நேரம் இருக்காது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ஏன் எதிர்க்கிறோம் என்பதைக் கூறுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

1983 மார்ச் 4]

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இது தமிழ் நாட்டினுடைய மிக முக்கியமான ஜனநாயக பிரச்சினையாக இருப்பதால் நாம் கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பலமுறை இந்த சட்டமன்றத்திலே தேர்தல்கள் நடத்தப்படும், இனிமேல் இப்படிப்பட்ட திருத்தச் சட்டம் வராது என்று வாக்குறுதி அளிக்கப்பட்டு, அவை நம்முடைய சட்டமன்ற ரெக்கார்டுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். சட்ட திருத்தம் வருகிற இப்போதாவது, அடுத்து வருகிற குறைந்த காலத்திற்குள் தேர்தல் நடத்துவதற்கான தேதியை அறிவிப்பதும் விவாதத்தில் வரவேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(இ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அறிமுகம் செய்வதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றேன். பொதுவாக, இன்றைக்கு இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மாதிரி தாவாக்கள் வராமல் இருப்பதற்கு அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே பேசப்பட்டது. ஆனால், இன்றைக்கு விசாரணையை விரைவுபடுத்துவதற்காக மனுவை தாக்கல் செய்திருக்கிறோம். ஆகவே, உச்ச நீதி